# விசாரணைக்காக மட்டுமே கைது நடவடிக்கை கூடாது

## உச்சநீதிமன்றம்

**புது தில்லி, பிப். 6:** 'ஒருவர் மீதான காவல் அதிகாரியின் கைது நடவடிக்கை என்பது விசாரணை அல்லது கேள்வி கேட்பதற்காக மட்டுமானதாகஇருக்கமுடியாது' என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது.

'கைது நடவடிக்கை என்பது ஆதாரங்களைச் சேகரித்தல் உள்ளிட்ட முறையான விசாரணை நடத்துவதற்கு காவல் அதிகாரிக்கு உதவும் சட்டபூர்வ விருப்பத் தேர்வு மட்டுமே; மாறாக, கைது நடவடிக்கையை கட்டாயமானதாகக் கருதக் கூடாது' என்றும் தெளிவுபடுத்தியது.

பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா (பிஎன்எஸ்எஸ்) 2023 சட்டத்தின் பிரிவு 35(3)-இன் கீழ் கைது நடவடிக்கை தொடர்பான அலாகாபாத் உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில்மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இதில், 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய வகையிலான குற்றம் தொடர்பான அனைத்து வழக்குகளிலும் விசாரணைக்காக இந்தச் சட்டப் பிரிவின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது கைது நடவடிக்கை கட்டாயமானதா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டது.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், என்.கே.சிங் ஆகியோர் அடங்கிய அமர்வு விதித்த தீர்ப்பு, உச்சநீதிமன்ற வலைதளத்தில் அண்மையில் பதிவேற்றம் செய்யப்பட்டது. அதில் கூறியிருப்பதாவது:

பிஎன்எஸ்எஸ் 2023 சட்டத்தின் பிரிவுகள் 35(1) (பி) மற்றும் 35(3) முதல் 35(6) வரையிலான பிரிவுகளைப் பொறுத்தவரை, கேள்வி கேட்பதற்காக அல்லது விசாரணை நடத்துவதற்காக மட்டுமே ஒரு காவல் அதிகாரி ஒருவரை கைது செய்யலாம் என்று பொருள் அல்ல.

மாறாக, 7 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடிய ஒரு குற்றத்தின் மீதான விசாரணை, சம்பந்தப்பட்ட நபரை காவலில் எடுக்காமல் திறம்பட முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை காவல் அதிகாரி தன்னைத் தானே உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே அதன் பொருள். கைது செய்யாமலும் விசாரணையை முன்னெடுத்துச் செல்ல முடியும்.

இதற்கு முரணான எந்தவொரு விளக்கமும், அந்தச் சட்டப் பிரிவுகளின் நோக்கத்தைச் சிதைத்துவிடும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சர்வதேச எல்லையில் அமித் ஷா ஆய்வு

**ஜம்மு, பிப். 6:** எல்லையில் ராணுவம் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா கூறினார்.

ஜம்மு-காஷ்மீரின் கதுவா பகுதியில் சர்வதேச எல்லையை யொட்டி அமைந்துள்ள ராணுவ சோதனைச் சாவடிகளை அவர் வெள்ளிக்கிழமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஹீராநகர் செக்டாரில் குர்னாம் மற்றும் போபியியான் பகுதிகளில் உள்ள எல்லைச் சாவடிகளுக்கு அவர் வருகை தந்தார். அங்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள எல்லைப் பாதுகாப்பு படையினர் (பிஎஸ்எஃப்) இடையே அமித் ஷா பேசியதாவது:

நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்புடன் வைத்திருக்க வேண்டும் என்ற பொதுவான இலக்கை மத்திய அரசும், எல்லைப் பாதுகாப்பு படையும் பகிர்ந்து கொண்டுள்ளன. சில ஆண்டுகளுக்கு முன்பு நாம் சந்தித்த சவால்களுக்கும் தற்போது நாம் சந்திக்கும் சவால்களுக்கும் பெரிய வேறுபாடு உள்ளது.

எல்லைப் பகுதிகளில் விழிப்புடன் கண்காணிப்பில் ஈடுபடுவது என்ற உங்களது அர்ப்பணிப்பு உணர்வு மிகவும் முக்கியமானது. நவீன தொழில்நுட்பத்தின் வழியாக சவால்கள் எழும் நிலையில் அவற்றை சமாளிக்க நாம் தொழில்நுட்ப ரீதியிலான தீர்வுகளைக் காண வேண்டும்.

எல்லைப் பாதுகாப்பை நவீன சாதனங்களைக் கொண்டு வலுப்படுத்த வேண்டியது அவசியம். எல்லையில்ராணுவம்கண்காணிப்பை மேற்கொள்வதற்கு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும்.

பயங்கரவாத முகாம்களைத் தகர்ப்பதற்காக எடுக்கப்பட்ட 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையின்போது எல்லைக்கு அப்பால் உள்ள எதிரியின் 118 சாவடிகளையும், 3 பயங்கரவாத முகாம்களையும் ஜம்மு எல்லையை அடிப்படையாகக் கொண்ட நமது படைகள் தாக்கி அழித்தன.

பிஎஸ்எஃப் படையின் 60-ஆவது ஆண்டானது இப்படையின் நவீனமயமாக்கல் ஆண்டாகவும், இப்படையினர் மற்றும் அவர்களது குடும்பங்களின் நலவாழ்வுக்கான ஆண்டாகவும் அனுசரிக்கப்படும் என்று வாக்குறுதி அளித்திருந்தேன். இது தொடர்பான நடவடிக்கைகளில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் ஒரு குழு ஈடுபட்டுள்ளது.

பிஎஸ்எஃப் படையினரின் நல்வாழ்வுக்காக மத்திய அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைக் கொண்டுவரும். தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எல்லைப் பாதுகாப்பை நவீனப்படுத்தத் தேவையான நிதியை ஒதுக்கவும் அரசு தயாராக உள்ளது.

உங்களது கடமை மற்றும் அர்ப்பணிப்பு காரணமாகவே ஒட்டுமொத்த நாடும் ஒவ்வொரு நாளும் அமைதியாக உறங்குவதுடன் பாதுகாப்பாக இருப்பதாகவும் உணர்கிறது.

எல்லைப் பகுதிகளில் மட்டுமின்றி நாட்டில் உள்ள கடினமான நிலப்பரப்புகள், ஒடிஸா மற்றும் சத்தீஸ்கரில் இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஆகியவற்றிலும் பிஎஸ்எஃப் படையினர் தங்களது வீரதீரத்தையும், அர்ப்பணிப்பு உணர்வையும் வெளிப்படுத்தியுள்ளனர் என்றார் அவர்.

**ஆளுநர் மாளிகையில் ஆய்வுக் கூட்டம்:** எல்லைச் சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்து ஜம்முவில் உள்ள ஆளுநர் மாளிகையில் ராணுவத்தினருடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமைத் தளபதி உபேந்திர துவிவேதி உள்ளிட்ட மூத்த தளபதிகள் பங்கேற்றனர்.

மேலும், ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வன்முறை மற்றும் பயங்கரவாதத் தாக்குதல்களின்போது உயிரிழந்தோரின் குடும்பத்தைச் சேர்ந்தோருக்கு பணிநியமன ஆணைகளை அமித் ஷா வழங்கினார்.

குர்னாம் எல்லைச் சாவடி பகுதியில் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா.

## சபரிமலை தங்கக் கவச முறைகேடு வழக்கு

# நடிகர் ஜெயராமுக்கு அமலாக்கத் துறை சம்மன்

**கொச்சி, பிப். 6:** சபரிமலை ஐயப்பன் கோயில் தங்கக் கவச முறைகேடு வழக்கில் விசாரணைக்கு ஆஜராகும்படி, நடிகர் ஜெயராமுக்கு அமலாக்கத் துறை அழைப்பாணை (சம்மன்) அனுப்பியுள்ளது.

கேரள காவல் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி), அண்மையில் ஜெயராமிடம் விசாரணை மேற்கொண்ட நிலையில், அமலாக்கத் துறை அழைப்பாணை அனுப்பியுள்ளதாக அதிகாரிகள் வெள்ளிக்கிழமை தெரிவித்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயில் துவார பாலகர் சிலைகள் மற்றும் கருவறைக் கதவுகளின் தங்க கவசங்கள் கடந்த 2019-இல் புதுப்பிக்கப்பட்ட பிறகு அவற்றின் எடை குறைந்ததாகப் புகார் எழுந்தது. இது குறித்து கேரள உயர்நீதிமன்ற உத்தரவின்பேரில் இரு வழக்குகளைப் பதிவு செய்து, கேரள காவல் துறையின் சிறப்புப் புலனாய்வுக் குழு (எஸ்ஐடி) விசாரணை மேற்கொண்டு வருகிறது.

தங்கக் கவசம் புதுப்பிப்புப் பணிக்கான செலவை ஏற்ற பெங்களூரு தொழிலதிபர் உண்ணிகிருஷ்ணன் போற்றி, திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் தலைவர்கள் என்.வாசு, ஏ.பத்மகுமார், தேவஸ்வம் வாரிய முன்னாள் நிர்வாக அதிகாரிகள் பி.முராரி பாபு, எஸ்.ஸ்ரீகுமார், முன்னாள் செயல் அதிகாரி சுதீஷ் குமார், புதுப்பிப்புப் பணியை மேற்கொண்ட சென்னை ஸ்மார்ட் கிரியேஷன்ஸ் நிறுவன தலைமைச் செயல் அதிகாரி பங்கஜ் பண்டாரி உள்பட 12 பேர் அடுத்தடுத்து கைதாகினர். இவர்களில் பி.முராரி பாபு, ஸ்ரீகுமார், சுதீஷ் குமார், உண்ணிகிருஷ்ணன் போற்றி ஆகியோர் இதுவரை ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கேரளத்தில் அரசியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த விவகாரத்தில், பணமுறைகேடு தடுப்புச் சட்டத்தின்கீழ் தனியாக வழக்குப் பதிவு செய்து அமலாக்கத் துறை விசாரணை மேற்கொண்டுள்ளது.

**ஜெயராமுக்கு அழைப்பாணை:** கடந்த 2019-இல் சபரிமலை கோயிலில் இருந்து சென்னைக்கு எடுத்துவரப்பட்ட தங்கக் கவசங்களுடன் உண்ணிகிருஷ்ணன் போற்றி ஏற்பாட்டில் நடிகர் ஜெயராம் வீட்டில் பூஜை நடைபெற்றதாக ஒரு காணொலி வெளியானது. இருவருக்கும் உள்ள தொடர்புகள் குறித்து ஜெயராமிடம் அண்மையில் எஸ்ஐடி விசாரணை மேற்கொண்டது. சென்னையில் உள்ள ஜெயராமின் இல்லத்தில் இந்த விசாரணை நடைபெற்றது.

அதேநேரம், தான் எந்தத் தவறும் செய்யவில்லை என்றும், தங்கக் கவச புதுப்பிப்புப் பணியை மேற்கொண்ட நிறுவனம் மற்றும் நன்கொடையாளர்களுடன் தனக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் ஜெயராம் மறுப்பு தெரிவித்தார்.

இந்நிலையில், அமலாக்கத் துறை விசாரணைக்கு ஆஜராகும்படி அவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அடுத்த சில தினங்களில் அவர் விசாரணைக்கு ஆஜராவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உண்ணிகிருஷ்ணன் போற்றிக்கு விரைவில் சம்மன்:** திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய முன்னாள் நிர்வாக அதிகாரி எஸ்.ஸ்ரீகுமாரிடம் அமலாக்கத் துறையினர் வெள்ளிக்கிழமை விசாரணை மேற்கொண்டனர். கொச்சியில் உள்ள அமலாக்கத் துறை இயக்குநரகத்தில் இந்த விசாரணை நடைபெற்றது.

துவாரபாலகர் சிலை தங்கக் கவச முறைகேடு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 6-ஆவது நபர் இவராவார். அண்மையில் தேவஸ்வம் வாரிய முன்னாள் நிர்வாக அதிகாரி முராரிபாபுவிடம் அமலாக்கத் துறை விசாரணை நடத்தியிருந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட முக்கிய நபரான உண்ணிகிருஷ்ணன் போற்றிக்கு விரைவில் அழைப்பாணை அனுப்ப அமலாக்கத் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

# பிகாரில் மறுதேர்தல் கோரிய ஜன் சுராஜ் மனு தள்ளுபடி

**புது தில்லி, பிப். 6:** பிகார் பேரவைக்கு மறுதேர்தல் நடத்தக் கோரி பிரசாந்த் கிஷோர் தலைமையிலான ஜன் சுராஜ் கட்சி தாக்கல் செய்த மனுவை உச்சநீதிமன்றம் வெள்ளிக்கிழமை தள்ளுபடி செய்தது.

பிகாரில் 243 தொகுதிகளுக்கு கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் 202 தொகுதிகளில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்று ஆட்சியைத் தக்கவைத்தது. முதல்வராக ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதீஷ் குமார் பதவியேற்றார். எதிரணியில் போட்டியிட்ட காங்கிரஸ்-ராஷ்ட்ரீய ஜனதா தளத்தின் 'இண்டி' கூட்டணி 35 தொகுதிகளைக் கைப்பற்றியது.

இந்தத் தேர்தலில் புதிதாகக் களமிறங்கிய முன்னாள் தேர்தல் உத்தி வகுப்பாளர் பிரசாந்த் கிஷோரின் ஜன் சுராஜ் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. இந்நிலையில், பிகார் பேரவைத் தேர்தலுக்கு முன்பாக அந்த மாநிலத்தில் சுய வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மகளிருக்கும் தலா ரூ.10,000 வழங்கப்பட்டது. இது தேர்தல் நடத்தை விதிமீறல் என்பதால் பிகார் பேரவைத் தேர்தலை ரத்து செய்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்த வேண்டுமென ஜன் சுராஜ் சார்பில் உச்சநீதிமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு மீது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த் மற்றும் நீதிபதி ஜயமால்ய பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு வெள்ளிக்கிழமை விசாரணை நடத்தியது.

அப்போது நீதிபதிகள் அமர்வு கூறியதாவது: பிகார் பேரவைத் தேர்தலில் மனுதாரர் (ஜன் சுராஜ்) பெற்ற வாக்குகள் எத்தனை? மக்கள் உங்களை நிராகரித்தபின் நீதித் துறையை அணுகி விளம்பரம் தேடிக்கொள்ள முயல்கிறீர்கள். மகளிருக்கு ரூ.10,000 வழங்கிய திட்டத்தை அப்போதே எதிர்த்து மனு தாக்கல் செய்யாதது ஏன்?

இந்தத் திட்டம் வங்கிக் கணக்கில் நேரடியாக பணம் செலுத்தும் திட்டம் போன்றதல்ல. இது பெண்கள் சுய உதவிக் குழுத் திட்டம். இந்த விவகாரம் ஒரு மாநிலத்தை மட்டுமே சார்ந்தது என்பதால் மனுதாரர் பாட்னா உயர்நீதிமன்றத்தை அணுகலாம். இலவசங்கள் தொடர்பான முக்கிய பிரச்னைகளை மட்டுமே உச்சநீதிமன்றம் ஆய்வு செய்யும் என்றனர். இதையடுத்து, ஜன் சுராஜ் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

**GOVERNMENT OF PUDUCHERRY**
**PUBLIC WORKS DEPARTMENT**

No.6586/PW/EE/BRC/DB/DR-I/25-26 Puducherry, dt.06/02/2026

**e-TENDERING NOTICE INVITING BID THROUGH RFP**

On behalf of the President of India, Bids are invited for **1. N/W : "Appointment of Firm / Agency / Contractor for Consultancy Services for Preparation of Detailed Project Report (DPR) for (1) Construction of Cable stayed bridge at (a) Pondy Marina to Veerampattinam with formation of approach road, (b) Thengaithittu to Murungapakkam with formation of approach road, (2) Upgradation of existing alignment and formation of road between Uppalam Road to Ariyankuppam in Puducherry Region".** Bid Security : **Rs.6,00,000/-**, Period of Completion: **3 (Three) Months** (Including Monsoon Period). Last time & date of submission of tender on (or) before **3.00 PM on 23.02.2026.**

For further details please refer the website **www.pudutenders.gov.in** from **10.00 AM on 07.02.2026.**

No.794/DIP/AD(PRESS)/2025-26 **EXECUTIVE ENGINEER**


# ‘கூஸ்கோர் பண்டத்’ திரைப்பட டீசரை நீக்க மத்திய அரசு உத்தரவு

**புது தில்லி, பிப்.6:** 'கூஸ்கோர் பண்டத்' (ஊழல் பண்டிதர்) ஹிந்தி திரைப்படத்தின் 'டீசர்' உள்பட அனைத்து விளம்பரங்களையும் நீக்க நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனத்துக்கு மத்திய அரசு உத்தரவிட்டதாக பாஜக வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

ஜாதிய ரீதியான தலைப்பால் கூஸ்கோர் பண்டத் திரைப்படத்தின் டீசர் பெரும் சர்ச்சையானது. இது ஒரு சமூகத்தினரின் உணர்வுகளைப் புண்படுத்துவதாக சமூக வலைதளங்களில் பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

உத்தர பிரதேச மாநிலம் லக்னௌவில் உள்ள ஹஸ்ரத்கஞ்ச் காவல் நிலையத்தில் இந்த திரைப்படக் குழுவினர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பாக பெறப்பட்ட புகாரின் அடிப்படையில் மத்திய தகவல்- ஒலிபரப்புத் துறைக்கு தேசிய மனித உரிமைகள் ஆணையம் நோட்டீஸ் அனுப்பியது.

இதுகுறித்து பாஜக மூத்த தலைவர் ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், 'கூஸ்கோர் பண்டத் திரைப்படத்தின் டீசர் உள்பட அனைத்து விளம்பரங்களையும் நீக்க நெட்ஃப்ளிக்ஸ் நிறுவனத்துக்கு உத்தரவிட்டு மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எந்தவொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் உணர்வுகளும் புண்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது' என்றார்.

பாஜக தேசிய செய்தித்தொடர்பாளர் கௌரவ் பாட்டியா வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'மத்திய அரசு மேற்கொண்ட உடனடி நடவடிக்கையால் கூஸ்கோர் பண்டத் திரைப்படம் நெட்ஃப்ளிக்ஸ் ஓடிடி தளத்தில் இருந்து நீக்கப்பட்டது. சநாதன தர்மத்தை அவமதிக்கும் எவ்வித செயலையும் சகித்துக் கொள்ள முடியாது என்பதற்கு இந்த நடவடிக்கையே சிறந்த உதாரணம். வணிக நோக்கத்துக்காக எந்தவொரு ஜாதி அல்லது சமூகத்தை யார் சிறுமைப்படுத்த முயன்றாலும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதே நமது கொள்கை' என குறிப்பிட்டார்.

இந்நிலையில், திரைப்படத்தின் பெயரும் டீசரும் சர்ச்சைக்குள்ளானதைத் தொடர்ந்து, திரைப்படம் தொடர்பான அனைத்து விதமான விளம்பரங்களையும் உடனடியாகத் திரும்பப் பெறுவதாக தயாரிப்பாளர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**KARAIKAL MUNICIPALITY**
**KARAIKAL**

**No. 11/ KM/ES/D4/Tender/2025-26** **Karaikal the : 06.02.2026**

**TENDER NOTICE FOR e-Tender**

On behalf of the Karaikal Municipal Council, tenters are invited through e-Tendering by the Commissioner, Karaikal Municipality, Karaikal, for the following work from the eligible contractors/firms. **Contractors other than those resistered with PWD, Puducherry** should produce documentary evidence in support of their having satisfactorily completed three similar works each of 40% of estimate cost put to tender two works each of 60% of estimate cost put to tender or one work of 80% of estimate cost put to tender in the last Seven years ending **previous day of last date of submission of tenders.** (Similar work means execution of **"Civil Work / Road work"**. The value of executed works shall be brought to current costing level by enhancing the actual value of work at simple rate of 7% per annum; calculated from the date of completion to last date of receipt of application for tenders. **The contractor after purchasing the valid ikey and Digital Signature Certificate** can only be able to download tha Press Notice, Notice inviting Tender and other related documents and upload the bid document online by verifying the Tender number assigned for each work from **www.pudutenders.gov.in**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (i) | Availability of NIT, BOQ and remittance of EMD from Sl. No. 1 to 6 | From | 5.00 PM | On | 11.02.2026 |
| (ii) | Closing Date & Time for submission of e-Tender | To | 11.00 AM | On | 17.02.2026 |
| (iii) | Date & Time of opening of e-tenders. | at | 11.30 AM | On | 17.02.2026 |

The EMD and Tender cost (as noted in column 5 & 7 of the table of Tender Notice) are to be remitted in online mode only .

Please contact e-Procurement cell e-tender help desk for guidance in Phone No. 0413-2220225 & 1800 233 7315 (Toll Free) on working days, Mail ID **support-eproc.py@supportgov.in.**

Future details may access website : **https://pudutenders.gov.in.**

**COMMISSIONER**
**KARAIKAL MUNICIPALITY**

No.364/DiP/KKL/ADVT/2026


# மேகாலயம்: நிலக்கரிச் சுரங்க விபத்தில் உயிரிழப்பு 25-ஆக உயர்வு

**ஷில்லாங், பிப். 6:** மேகாலயத்தில் சட்டவிரோத நிலக்கரிச் சுரங்கத்தில் நிகழ்ந்த வெடி விபத்தில் மேலும் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்ட நிலையில், உயிரிழப்பு எண்ணிக்கை 25-ஆக உயர்ந்துள்ளது.

மேகாலயத்தின் கிழக்கு ஜெயின்டியா மலை மாவட்டத்தின் தாங்ஸ்கு பகுதியில் செயல்பட்டுவந்த சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் வியாழக்கிழமை திடீரென வெடிவிபத்து நேரிட்டது. சுரங்கம் இடிந்ததில் ஏராளமான தொழிலாளர்கள் உள்ளே சிக்கினர்.

விபத்தைத் தொடர்ந்து, தேசிய, மாநில பேரிடர் மீட்புப் படையினர், சிறப்பு மீட்புக் குழுவினர் உள்ளிட்டோர் பெரிய அளவில் மீட்புப் பணியைத் தொடங்கினர். இடிபாடுகளில் இருந்து 18 பேரின் உடல்கள் வியாழக்கிழமை மீட்கப்பட்டன.

வெள்ளிக்கிழமை மேலும் 7 பேரின் உடல்கள் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, உயிரிழப்பு எண்ணிக்கை 25-ஆக உயர்ந்தது. உயிரிழந்தவர்களில் இதுவரை 12 பேரின் உடல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மீதமுள்ளோரையும் அடையாளம் காணும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில பேரிடர் மீட்பு ஆணையத்தின் கண்காணிப்பில் மீட்பு நடவடிக்கைகள் தொடர்வதாக, காவல் துறை தலைமை இயக்குநர் நோங்ராங் தெரிவித்தார்.

மேகாலயத்தில் 'எலிவளை' நிலக்கரிச் சுரங்கம் மற்றும் பிற அறிவியல்பூர்வமற்ற சுரங்க நடைமுறைகளுக்கு தேசிய பசுமைத் தீர்ப்பாயம் கடந்த 2014-இல் தடைவிதித்தது.

சுற்றுச்சூழல் சேதம் மற்றும் பாதுகாப்பு அபாயங்களைக் கருத்தில்கொண்டு பிறப்பிக்கப்பட்ட இந்த உத்தரவை உச்சநீதிமன்றமும் உறுதி செய்தது குறிப்பிடத்தக்கது.


**UJJIVAN SMALL FINANCE BANK**

**பதிவு அலுவலகம்:** கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
**கிளை அலுவலகம்:** எண்.74, அன்னகாமாட்சி டவர், தெற்கு வீதி, வார்டு எண்.2, ப்ளாக் எண்.38, தெற்கு கிராமம், திருவாரூர், தமிழ்நாடு-610001

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

**கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.**

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்து "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

| கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர் | (i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி | 27.01.2026 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை | குறைந்தபட்ச கேட்பு விலை | டேவணித்தொகை (EMD) |
|---|---|---|---|---|
| 1639210030000002 1.Mr.சண்முகம்.T, 2. Mrs.மலர்கொடி | (i) 13.07.2021 & 23.09.2021 அன்றுள்ளபடி ₹ 9,75,915/- (ரூபாய் ஒன்பது லட்சத்து எழுபத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து பதினைந்து மட்டும்) (ii) அடையாளபூர்வமான சுவாதீனம் & நேரடியான சுவாதீனம் 14.09.2022 & 14.11.2025 | ₹ 11,34,167.85 (ரூபாய் பதினொன்று லட்சத்து முப்பத்து நான்காயிரத்து நூற்று அறுபத்தேழு மற்றும் பைசா எண்பத்தைந்து மட்டும்) | ₹ 6,76,500/- (ரூபாய் ஆறு லட்சத்து எழுபத்தாறாயிரத்து ஐநூறு மட்டும்) | ₹ 67,650/- (ரூபாய் அறுபத்து ஏழாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) |

**சொத்து விவரம்:** நாகப்பட்டினம் பதிவு மாவட்டம், திருவாரூர் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S.எண்.60/15, **தாரணமங்கலம் கிராமம், திருவாரூர் பஞ்சாயத்து யூனியன், திருவாரூர் வட்டம், திருவாரூர் மாவட்டம்** என்னும் முகவரியில் **100 சதுர மீட்டர் மனை, அதனுடன் RCC கட்டிடம்** மற்றும் அனைத்து இதர வசதிகள். அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். அளவுகள்: கிழக்கு மேற்காக: வடக்கு பக்கம் 8 மீட்டர், தெற்கு பக்கம் வடிவமற்ற, தெற்கு வடக்காக: கிழக்கு பக்கம் 13.6 மீட்டர், மேற்கு பக்கம் 14 மீட்டர் மொத்தம் 100 சதுர மீட்டர். எல்லைகள்: கிழக்கு: சுப்பையாப்பன் வீட்டு மனை, மேற்கு: சாமிக்கண்ணு வீட்டு மனை, தெற்கு: பாண்டவையாறு.
**இந்த சொத்தானது Mr.T.சண்முகம்-க்கு சொந்தமானது. (உங்களில் எண்.1-ல் உள்ள நபர்)**

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 17.03.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை**

| விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி | சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் |
|---|---|
| தேதி: 16.03.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை | 15.03.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை |

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
**Mr.S.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ ஷாஜன் - 78451 92961**

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனரான **M/s.C1 India PVT LTD.** மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு **Mr. Prabhakaran (Mob: 74182 81709)**) உத்தேச விலைக்குறிப்பீட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு **https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions** பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பீட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை **https://www.bankeauctions.com**-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சியை சேவை வழங்குனரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். **M/s. C1 India PVT LTD, Helpline Number's- 7291918824,25,26 support email id:- support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.**
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., **https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com**

தேதி: 07.02.2026 ஒப்பம்/-
இடம்: பெங்களூரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்



**IN THE COURT OF DISTRICT JUDGE AT KARAIKAL**
**LAOP.No. 21 of 2025**

Madina Beevi ...Claimant/Petitioner

Vs

1) Union of India Represented by Secretary (Revenue) to Government
2) The Sub Collector (Revenue)-cum-Land Acquisition Officer
3) The Executive Engineer, B&R-Public Works Department

... Referring Officers/Respondents

**பொது அறிவிப்பு**

புதுச்சேரி யூனியன் பிரதேசம் காரைக்கால் மாவட்டம் மற்றும் நகரம் காமராஜர் சாலை கதவு எண் 182/3-ல் வசிக்கும் ஜஹபர் அவர்களின் மனைவி மதினா பீவி ஆகிய தாங்கள் தங்கள் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதற்காக இழப்பீடு தொகையை உயர்த்தக்கோரி சமர்பித்த நிலம் கையகப்படுத்துதல் மறுவாழ்வளிப்பு மற்றும் மறுகுடியமர்வில் நேரிய சரியீடு மற்றும் வெளிப்படைத்தன்மை உரிமைச்சட்டம் 2013 பிரிவு 64-ன் படி மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டு வழக்கு எண்: LAOP.No. 21 of 2025 ஆக பதியப்பட்டு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் எதிர்வரும் 26.02.2026-ல் தாங்கள் மேற்படி நீதிமன்றத்தில் காலை 10 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராக வேண்டும். தவறினால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யபடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**A.செந்தில்குமார்,**
**அரசு வழக்கறிஞர்,**
**காரைக்கால்.**



**பொது அறிவிப்பு**

மயிலாடுதுறைமாவட்டம், சீர்காழிதாலுக்கா, வாணகிரிகிராமம், குச்சிபாளையம், கதவு எண். 6/56 என்ற முகவரியில் வசிக்கும் திரு.ஜெயபால் அவர்களின் குமாரர் **திரு.J.சிவனேசன்** அவர்கள் இதன் கீழ் சொத்து விவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி தாலுக்கா, வாணகிரி கிராமம், குச்சிபாளையத்தை சேர்ந்த திரு.அப்பாதுரை அவர்கள் மகன் திரு. A. உத்திராபதி அவர்களிடமிருந்து கடந்த 09.04.2008 தேதியன்று கிரயம் பெற்று அது செம்பனார்கோவில் இணை சார்பதிவகத்தில் ஆவண எண். 522/2008 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தானது திரு.அப்பாதுரைக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும், சொத்தினை பொருத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் திரு. அப்பாதுரை அவர்கள் இறந்துவிட்டதால் அவருக்கு பின் அவர் மனைவியும் இறந்துவிட்டதால் அவருடைய ஒரே வாரிசான திரு.A.உத்திராபதி அவர்கள் மேற்படி சொத்து வாரிசு உரிமை அடிப்படையில் தனக்கு கிடைக்கப்பெற்றது என உறுதியிட்டு மேற்படி கிரயம் செய்து கொடுத்துள்ளார்.

மேற்படி J.சிவனேசன் அவர்கள் இந்த சொத்தினை அடமானம் வைத்து ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, மயிலாடுதுறை வங்கி கிளையில் கடன் பெற விண்ணப்பித்துள்ளார்.

எனவே இதன் கீழ் சொத்துவிவரத்தில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து சம்மந்தமாக ஏதேனும் வாரிசு உரிமை, விற்பனை, ஈடு, கடன், போக்கியம் மற்றும் சுவாதீனம் சம்மந்தமாக ஆட்சேபனை இருப்பின், இந்த அறிவிப்பு வெளியிட்ட ஏழு நாட்களுக்குள் ஆட்சேபனை சம்மந்தமான ஆவண ஆதாரங்களுடன் கீழ்கண்ட முகவரிக்கோ அல்லது முதன்மை மேலாளர், ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, மயிலாடுதுறை வங்கி கிளை, 609 001. நேரிலோ அல்லது முகவரி: நெ.2, அவயாம்பாள் புரம், மயிலாடுதுறை- எழுத்துபூர்வமாக தெரிவிக்க வேண்டி அறிவிக்கப்படுகிறது.

**சொத்து விவரம்**

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், செம்பனார்கோவில் சார்பதிவகம், சீர்காழி தாலுக்கா, வாணகிரி வட்டம், குச்சிப்பாளையம் தெரு. புஞ்சை பழைய சர்வே எண்.261/15 புதிய சர்வே எண். 261/19-ல் ஏ 0.25 செண்ட் (இருபத்தைந்து செண்ட் மட்டும்) 10,900 சதுரடிக்கு சமமான 1013.01 சதுர மீட்டர் அதில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி. மாடி வீடு உட்பட.

**நான்கெல்லை:** தெருவிற்கும், விஜயலெட்சுமி மனைக்கும் **கிழக்கு**, சங்கர் பிள்ளை வகையறா புஞ்சைக்கு **மேற்கு**, கண்ணன் பிள்ளை வகையறா புஞ்சைக்கு **வடக்கு**, சந்திரன் விஜயலெட்சுமி நஞ்சைக்கு **தெற்கு**.

**ஜெ.பாரி பி.ஏ.,பி.எல்.,**
**வழக்கறிஞர்,**
3B, அய்யப்பன் காம்ப்ளக்ஸ், காமராஜர் சாலை
(நீதிமன்றம் அருகில்)
மயிலாடுதுறை 609 001.
**செல்: 9443488433.**